BITSMANS
INSTITUTES
Manipay.
88 A/L
அசேதன இரசாயனம்
திரு மகாதேவா B.Sc
ஆரம்பம்: 10 - 01 . 87
SAT 12.30 p m
நேர அட்டவணை;
SAT., SUN. 12 30

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ-1/=

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

Bitsmans Institutes
Manipay.
3ஆவது பிரிவு
O/L கல்வி ஆண்டு
10, 9 8, 7, 6ஆம்
வகுப்புகளுக்குரிய சகல பாடங்களும் எமது வழமையான 'Super Grade' ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
ஆரம்பம்: 9-1-1987
வெள்ளி: 3-30 p. m.

சுடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு மார்கழி மீ 22 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமாதி அவ்] பிறை 5 (06-01-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 35

## இனப்பிரச்சினை:

# ஏனைய நாட்டு தூதுவர்களை சந்தித்து டிக்ஸிற் விளக்கம்

## நிர்ப்பந்தம் கொடுக்கத் தூண்டும் முயற்சியாம்

கொழும்பு. ஜனவரி 6

இலங்கை இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் தேக்க நிலையில் உள்ளது குறித்து இந்திய அரசின் சார்பில் கொழும்பில் உள்ள தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் ஏனைய நாட்டுத் தூதுவர்களுக்கு இப்போது விளக்கி வருகிறார்.

பிரச்சினையை இழுத்தடிக்காமல், நியாயமான தீர்வை விரைவில் காணுமாறு இலங்கை அரசை நிர்ப்பந்திக்குமாறு ஏனைய நாடுகளைத் தூண்டும் முயற்சியாகவே இந்தியத் தூதுவர் இவ்வாறு விளக்கம் அளித்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

திரு டிக்ஸிற் அவுஸ்திரேலியா, அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, கனடா ஆகிய நாடுகளின் தூதர்களை தனித்தனியே கடந்த இரண்டு மூன்று தினங்களாகச் சந்தித்தார்.

சிதம்பரம் குழு இனப்பிரச்சினைப் பேச்சுக்களில் பங்கு ஏற்ற பின்னர் ஏற்பட்ட முன்னேற்றம், இறுதியாக கடந்த டிசம்பரில் சிதம்பரம் குழு பேச்சுக்கள் நடத்திய பின்னர் இலங்கை அரசின் நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியவை குறித்துத்தான் இந்தியத் தூதர், ஏனைய தூதர்களுக்கு விளக்கினார் என்று ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழரின் அபிலாஷைகளைத் தீர்க்கக்கூடியதான தீர்வு ஒன்றுக்கு வரும்படி இலங்கைக்கு நிர்ப்பந்தம் கொடுக்கும் முயற்சியாகவே இந்தியத் தூதர், ஏனைய தூதர்களைச் சந்தித்தார்.

இப்படி ராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (இ-எ)

### உயர் அதிகாரிகள் இடமாற்றம்

கொழும்பு ஜன 6

யாழ்ப்பாணம் கல்வி அலுவலகத்தின் உயர் அதிகாரிகள் இருவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று மிக நம்பிக்கையாக அறிய வருகிறது.

கல்வி அமைச்சரின் நேரடி உத்தரவின் கீழ் இந்த இடமாற்றங்கள் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் அறியவந்தது.

இரண்டு உயர் அதிகாரிகளில் ஒருவர் கிளிநொச்சிக்கும், மற்றவர் முல்லைத்தீவுக்கும் இடமாற்றப்பட்டுள்ளார். கிளிநொச்சியிலிருந்து ஓர் உயர் அதிகாரி யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். (அ-119)

### முச்சந்தி முனி



என்ன யாழ்ப்பாணச் சனத்தை வானத்திலை இருக்கச் செய்வாராமோ? அவர் உதில்லை உப்படி எத்தனையைச் சொல்லுவார்!

### இந்தியா 400 ஓட்டங்கள்

கட்டாக், ஜன 6

இலங்கைக்கு எதிரான 3ஆவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 400 ஓட்டங்களை எடுத்து தனது முதலாவது இன்னிங்ஸை முடித்துக் கொண்டது.

வெங்சஸ்கார் 160 ஓட்டங்களை எடுத்தார். இது அவரின் 14ஆவது டெஸ்ட் செஞ்சரி என்று அறிவிக்கப்பட்டது.

கபில்தேவும் வெங்கஸ்காரும் சேர்ந்து 111 ஓட்டங்களைக் குவித்தனர்.

முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி ஆட்டம் முடிந்தபோது 2 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 37 ஓட்டம் மட்டுமே எடுத்து இருந்தது.

மூன்றாவதும் இறுதியுமான இந்த டெஸ்டின் 3ஆம் நாள் ஆட்டம் இன்று நடைபெறும். (இ-எ)

### பெண்ணைப் பிடித்து கிணற்றுக்குள் தொங்கவிட்ட சிப்பாய்கள்!

மட்டக்களப்பு, ஜனவரி 6

தேடுதலுக்குச் சென்ற ஆயுதப்படையினர் 56 வயதான இரண்டு பிள்ளைகளின் தாயாரை கால்களில் பிடித்து கிணற்றினுள் தொங்கவிட்டனர்.

இச் சம்பவம் நேற்று, மட்டக்களப்பு ஊறணி கிராமத்தில் இடம்பெற்றது.

கிணற்றுக்குள் தலைகீழாக சுமார் 10 நிமிடங்கள் வரை தொங்கவைத்து கால்களைப் பிடித்துக் கொண்டிருந்த படையினர் பின்னர் அப் பெண்ணை மரத்தில் கட்டிவைத்து விட்டுச் சென்றனர்.

அயலவர்கள் சென்று கட்டை அவிழ்த்து பெண்ணை மீட்டனர்.

பெண்ணின் பெயர் கனகம்மா. தனது 2 புதல்வர்களும் எங்கே சென்றனர் என்பது தனக்குத் தெரியாது என்று அப்பெண் கூறியதற்கே இத்தண்டனை. (இ-எ-21)

## முஸ்லிம்களை சிப்பாய்கள் சுட்டனர்

### போராளிகள் என நினைத்து

அம்பாறை, ஜன; 6

தங்களுக்குள் மோதிக்கொள்ள போராளிகள் வெளியே வருவார்கள் என்று எதிர்பார்த்துக் காத்து இருந்த பொலீஸ் கொமாண்டோக்கள் சுட்டதில் பஸ் ஒன்றில் பயணம் செய்த ஒன்பது முஸ்லிம்கள் படுகாயம் அடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 1-30 மணியளவில் நிந்தாவூர் - காரைதீவு பிரதான வீதியில் இடம் பெற்றது.

இது பற்றிக் கூறப்படுவதாவது;

காரைதீவில் உள்ள ஈ பி. ஆர். எல். எப். போராளிகளுக்கும் அட்டப்பள்ளம் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்ந்து

(4-ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ நடவடிக்கை வேண்டாம்!

## இந்தியா எச்சரிக்கிறது

### ஜனாதிபதியை டிக்ஸிற் சந்தித்தார்

கொழும்பு, ஜன 6

இனப் பிரச்சினைத் தீர்வாக, இராணுவ நடவடிக்கை எடுக்கும் முயற்சி எதிலும் இறங்கவேண்டாம் என்று இந்திய அரசு, இலங்கை அரசாங்கத்தை எச்சரித்துள்ளது.

வட பகுதி மீது இலங்கை அரசு விதித்துள்ள எரிபொருள் தடை பற்றி கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற் நேற்றுப் பகல் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்து 45 நிமிடங்கள் வரையில் பேசினார்.

### எரிபொருள் தடை பற்றியும் பிரஸ்தாபம்

வடபகுதி மீது விதிக்கப்பட்ட எரிபொருள்

(4ஆம் பக்கம் பார்க்க)

### நட்வர் சிங்கை மந்திரி காமினி சந்திப்பார்

கொழும்பு. ஜன 6

புதுடில்லி செல்லும் அமைச்சர் காமினி திஸநாயகா, இணை அமைச்சர் நட்வர்சிங்குடன் பேச்சுக்களை நடத்துவார் என்று ஜனாதிபதி ஜயவர்த்தனா நேற்று இந்தியத் தூதர் டிக்ஸிற்றுக்குத் தெரியப்படுத்தினார்.

இலங்கை கிறிக்கெட் சபைத்தலைவர் என்ற ஹோதாவில் அமைச்சர் காமினி திஸநாயக்க இம்மாதம் 8முதல் 10 வரை புதுடில்லியில் தங்கி நிற்பார். (இ-எ)

## [சபாநாயகரை] நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு

சென்னை, ஜன 5

பத்து தி மு. க எம். எல் ஏக்களை விலக்கியது குறித்து, விலக்கப்பட்ட எம் எல் ஏக்களில் ஒருவரான திரு இரா. அன்பழகன் செய்து கொண்ட ரிட் மனுவின் மீது, சட்டசபை சபாநாயகரை நீதிமன்றத்தில் ஆஜராகும் படி சென்னை உயர் நீதிமன்றம் நேற்றுப் பணித்தது.

10 எம். எல். ஏக்களை விலக்கும் சட்டத்தை நிறுத்திவைக்க வேண்டும் என்று கோரி தி. மு. க.

(4-ம் பக்கம் பார்க்க)

### வவுனியா வந்த விசேட ரயில்

யாழ்ப்பாணம் ஜன.6

ஜி.சி.ஈ விடைத்தாள்கள் திருத்தச் சென்ற ஆசிரியர்களை ஏற்றிக் கொண்டு நேற்று விசேட ரயில் ஒன்று வவுனியா வரை வந்தது.

யாழ்தேவி வழமை போல் 11மணிக்கு வந்த போதிலும் விசேட ரயில் பிற்பகல் நான்கு மணி அளவில் வவுனியாவுக்கு வந்து சேர்ந்தது.

இந்த ரயில்களில் வந்த

(4-ம் பக்கம் பார்க்க)

## பொருளாதார தடையை முறியடிக்க ஒன்று திரளுவோம்

### புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன 6

எதிரியின் பொருளாதாரத்தடையை முறியடிக்க ஒன்று திரண்டு போராடி தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வென்றெடுப்போம்.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்தனர்.

அறிக்கையின் சாரம் வருமாறு:-

தமிழீழ விடுதலைப் போராட்டம் பரந்துபட்ட தமிழ்ப்பேசும் மக்களின் பூரணமான பங்களிப்புடன் வென்றெடுக்கப்பட்டு வரும் இக்காலகட்டத்தில் இப்போராட்டத்தை நசுக்க எதிரி பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டு வருகிறான். இராணுவ ரீதியாக நாம் வியக்கத்தகு வளர்ச்சி கண்டு எதிரியை முறியடித்து வரு

(4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

06 - 01 - 1987
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
11. 01முதல் 12 31 வரை
ராகுகாலம்:
3.31 முதல் 5.01 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### இஸ்ரவேல் ஆலோசகர்கள்

கொழும்பு, ஜன. 6

மூன்று இஸ்ரவேலிய பாதுகாப்பு ஆலோசகர்கள் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தனர்.

உடனடியாக இவர்கள் தியத்தலாவைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

பின்னர் வடபகுதி முகாம்களுக்கு இவர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். (சி-ஐ-ஏ)

## யாழ் நகரை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர லலித் கூறும் மாற்று யோசனை

கொழும்பு, ஜன. 6

யாழ்ப்பாண நகரைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஒரே ஒரு மாற்று வழிதான் உண்டு. அது யாழ் நகரில் உள்ள 1 லட்சத்து 13 ஆயிரம் குடிமக்களை வெளியேற்றுவதுதான்.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி நாத்தாண்டியாவில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிபந்தனையை

(4-ம்பக்கம் பார்க்க)

## அலுமினியத்துக்கும் தடை

கொழும்பு, ஜன 6

அலுமினியத்தை வடபகுதிக்கு அனுப்புவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்கூடிய பாதுகாப்புச் சபை இத்தீர்மானத்தை எடுத்ததாகத் தெரியவருகிறது.

போராளிகள் சொந்தமாக மோட்டோர் ஷெல் குண்டுகளை யாழ்க் குடாநாட்டில் உற்பத்தி செய்கிறார்கள். இதற்கு அலுமினியம் பயன்படுத்தப்படுகின்றது.

இதனைத் தடுக்கவே அலுமினியம் வட பகுதிக்கு அனுப்பப்படுவதற்கு தடை விதிக்க முடிவு செய்யப்பட்டது என்று பாதுகாப்புச்சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-ஐ-ஏ)

## துப்பாக்கிச் சூட்டுக்கு அஞ்சி நீரில் பாய்ந்த ஐவர்!

### சடலங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை

மட்டக்களப்பு, ஜன 6

ஆயுதப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பயந்து தண்ணீருக்குள் பாய்ந்த ஐந்து தமிழர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

இப்பரிதாப சம்பவம் கடந்த ஞாயிறு மாலை நாவற்குடா பகுதியில் இடம் பெற்றது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;

ஞாயிறு மாலை நாவற்குடா வழியாக ரோந்து வந்த படையினர் மீது கிறனேற் வீசப்பட்டது.

இதைத் தொடர்ந்து படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் பயந்து அப் பகுதிமக்கள் வேறு இடங்களுக்கு பாதுகாப்புத் தேடிச் சென்றனர்.

ஐந்து சிவல் தொழிலாளர்கள் ஒரு வள்ளத்தில் ஏறி மட்டக்களப்பு வாவி வழியே நாவற்குடாவில் இருந்து எருமைத்தீவை நோக்கிச் சென்று கொண்டு இருந்தனர்.

அப்போது அவர்கள் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்,

துப்பாக்கிச் சூட்டுக்கு தப்ப ஐவரும் வாவிக்குள் பாய்ந்தனர்,

நீரில் மூழ்கி இறந்த இவர்களின் சடலங்கள் இன்னும் கண்டுபிடிக்கப் படவில்லை.

உயிரிழந்தோரின் பெயர் விவரங்கள் வருமாறு:

1 வை. கிறிஸ்தோபர் காந்தி (23) 2 க. மனோகரன் (26) 3. த ரவிச்சந்திரன் (24) 4. தெ. சோமகன் (20) (5) பா இராஜேந்திரன் (22) (இ-எ-21)

### மின்னல் செய்தி

## புலி இல்லையா? கிளி இருக்கிறதே!

### சிப்பாய்களின் நடத்தை குறித்து பெண்கள் முறையீடு

மட்டக்களப்பு, ஜனவரி 6

புலி இல்லாவிட்டாலும் கிளி இருக்கிறதே!

இப்படிக் கூறி இளம்பெண்களுடன் ஆயுதப்படையினர் சேட்டை விடுகிறார்களாம்.

மட்டக்களப்புப் பிரசைகள் குழுவிடம் நேற்று சுமார் 50 தமிழ்ப்பெண்கள் மேற்கண்டவாறு கண்ணீர் மல்க முறையிட்டனர்.

ஊறணி, திருப்பெருந்துறை, இருதயபுரம், கொக்குவில் ஆகிய கிராமங்களைச்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கு பாதுகாப்பு அதிகாரம் அத்துலத்முதலியிடம்

கொழும்பு, ஜன. 6

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பாதுகாப்பு சம்பந்தமாக தீர்மானம் எடுக்கும் சகல அதிகாரங்களும் தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. அத்துலத்முதலிக்கு வழங்கப்பட்டுள்ளன.

இப்படி கொழும்பு அரச வட்டாரங்களில் இருந்து அறிய வருகிறது.

இதனிடையில் அமைச்சர் அத்துலத்முதலி, வடபகுதியில் சிவில் நிர்வாகத்தை மேற்கொள்ள விடுதலைப் புலிகள் எடுக்கும் நடவடிக்கைகள் பற்றி காரசாரமாகக் கருத்துத் தெரிவித்தார்.

தன்னிச்சையாக சுதந்திர பிரகடனத்தை மேற்கொள்ளாது, சில சிவில் நடவடிக்கைகளை புலிகள்

(4-ஆம் பக்கம் பார்க்க)

### ஹோமா சிகிச்சை பேராசிரியர் யாழ் வருகை

யாழ்ப்பாணம் ஜன. 6

இந்தியாவில் உள்ள சர்வதேச ஹோம சிகிச்சை ஆராய்ச்சி நிறுவனத்தைச்சேர்ந்தபேராசிரியர் எஸ். தி. முலே யாழ்ப்பாணம் வந்துள்

(4ம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் [illegible] இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ் சிறு விளம்பரங்கள் ★

**விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. இன் விளையாட்டுத்துறை அபிவிருத்தி நிதிக்காக 3-1-87 தொடக்கம் 3-2-87 வரை புத்தக விற்பனை வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடாத்தப்படும். A/L இலிருந்து நேசரி வகுப்பு வரைக்கும் தேவையான பாடப்புத்தகங்கள், கொப்பி வகைகள் மற்றும் உபகரணங்களும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**தேவை**

அலுவலகப் பணியாளர் (Peon) தேவை. தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விளம்பர எண்: 44, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

இயந்திரஇயக்குநர்கள் தேவை. ஹைடில்பேர்க் (HEIDELBERG) அச்சு இயந்திரத்தில் கடமையாற்றிய அனுபவமுள்ளவராக இருக்க வேண்டும். விளம்பர எண்: 43 மே/பா உதயன், யாழ்ப்பாணம்.


தொண்டமானாறு, மயிலியதனை

# மீனவருக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை

வல்வெட்டித்துறை, ஜன. 6

தொண்டமானாறு, மயிலியதனை போன்றகரையோர மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்.

ஆயுதப்படையினரின் தாக்குதலுக்குள்ளாகி குடிபெயர்ந்த மீனவர்களுக்கு வலை, வள்ளம், வீட்டு வசதி போன்றவற்றுக்கு நிவாரணம் வழங்க அகதிகள் புனர் வாழ்வுச்சழகம் முன்வந்துள்ளது.

மேலும் வெளி நாட்டு உதவியையும் தொண்டமானாறு அகதிகளுக்காக கோர உள்ளதாகவும் இக்கழகம் அறிவித்துள்ளது.

அண்மையில் வல்வைப் பிரஜைகள் குழு யாழ்ப்பாணத்தில் உள்ள மேற்படி தலைமையகத்தில் வைத்து இப்மீனவரின் நிலைபற்றிக் கூறிய போதே நிவாரனம் சம்பந்தமான வாக்குறுதியை அதன் தலைவர் திரு கா சிவத்தம்பி வழங்கினர். (இ- 160)

## பரிசளிப்பு வைபவம்

கொடிகாமம், ஜன. 6

பாடசாலைக் கல்விக்கு செல்லவுள்ள பாலர்களைப் பண்படுத்துவது பாலர் பாடசாலைகள் ஆகும்.

சாவகச்சேரி கிறிஸ்தவ திருச்சபைப் பாலர்பாடசாலை ஆண்டுப்பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பாலர் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த கல்வி அதிகாரி திரு. எஸ். தங்கராசா மேற்கண்டவாறு கூறினர்.

திருச்சபைப் போதகர் வண எஸ்.எம். ஆனல்ட் தலைமையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் வைபவம் நடைபெற்றது.

பாலர் பாடசாலை அதிபர் திருமதி க. கணேசராசா வரவேற்புரை நிகழ்த்தினர். (இ-75)

## இடையில் பாடசாலையை விட்டுஅகலும் மாணவர் எண்ணிக்கை அதிகரிக்கின்றது

பலாலி, ஜன. 6

யாழ் மாவட்டத்தில் கல்வி வட்டார ரீதியில் அண்மைக் காலத்தில் நடத்தப்பட்ட ஆய்வுகள் திடுக்கிடும் பல புள்ளி விவரங்களைத் தந்துள்ளன.

கல்வியில் அதிக அக்கறை உள்ளவர்கள் உள்ள யாழ்ப்பாணத்திலேயே இடை நடுவில் பாடசாலையை விட்டு விலகுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது.

யாழ்ப்பாணத்தின் கல்விநிலை எதிர்காலத்தில் வீழ்ச்சி அடையும் ஆபத்தைத்தடுக்க கல்வியில் அக்கறையுள்ளகல்விமான்கள் இப்போதிருந்தே முயற்சிக்க வேண்டும் என்று யாழ் கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. கந்தசாமி யாழ் கல்வி வட்டார அதிபர்கள் மத்தியில் உரையாற்றும்போது தெரிவித்தார். (இ-119)

## விடைத்தாள் திருத்த புறப்பட்ட ஆசிரியருக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவம்

சுன்னுகம் ஜன 6

விடைத்தாள் திருத்த கொழும்புக்குப் புறப்பட்டவருக்கு தாவடியில் ஏற்பட்டது சோதனை.

ஐந்நூறு ரூபாவையும் கைக்கடிகாரத்தையும் இழந்த இந்த ஆசிரியர் கொழும்புப் பயணத்தையும் கைவிட்டார்.

ஸ்கந்தவரோதய கல்லூரி ஆசிரியர் ஒருவருக்கு நேர்ந்த பரிதாப சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:

பிரஸ்தாப ஆசிரியர் ஜி சீ. ஈ. (சாதாரணதர) பரீட்சை விடைத்தாள் திருத்தும் வேலைக்காக கொழும்பு செல்ல சுன்னுகத்திலிருந்து சைக்கிளில் யாழ்ப்பாணத்துக்கு அதிகாலை 4-00 மணிக்கு மற்றொருவருடன் சென்றுகொண்டிருந்தார்.

இடையில் மறித்த இரு இளைஞர்கள் தொடர்ந்து பயணம் செய்யக்கூடாது எனப் பணித்தனர்.

தான் கொழும்புக்குச் செல்லவேண்டிய தன் அவசியத்தை ஆசிரியர் இளைஞர்களுக்கு விளக்கினார். ஆசிரியருடன் வந்தவரை வீட்டுக்குச் செல்லுமாறு கூறிய இளைஞர்கள் ஆசிரியரை தம்முடன் அழைத்துச்சென்றனர்.

தாவடியை அண்மித்ததும் ஆசிரியரை நையப் புடைத்து அவரிடமிருந்த கைக்கடிகாரம், பணம் ரூபா ஐநூறு ஆகியவற்றை இந்த இருவரும் பலாத்காரமாக பறித்துச் சென்றனர்.

இழப்புக்குள்ளான ஆசிரியர் நடந்து சுன்னுகம் வந்து சேர்ந்தார். (இ-27)

## கல்வித்தரம் குன்ற ஆசிரியர் தட்டுப்பாடே காரணம்

### பிரதம கல்வி அதிகாரி கூறுகிறர்

மண்டைதீவு, ஜன 6

ஆசிரியர் தட்டுப்பாடு காரணமாகவே கல்வித்தரம் குன்றிவருகின்றது வடபகுதியில் புங்குடுதீவு, உடுப்பிட்டி ஆகிய இடங்களில் இதனால் கல்வித்தரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தை சேர்ந்த பிரதம கல்வி அதிகாரி திரு. க கந்தசாமி உதயன் செய்தியாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்

வருடாவருடம் மாணவர்கள் எண்ணிக்கை கூடிக்கொண்டு போகும் போது அங்கு ஆசிரியர் தட்டுப்பாடும் இடப்பற்றுக்குறையும் ஏற்படுவது சகஜமாகின்றது.

ஆசிரிய தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு இயன்றவரை அவ்வப் பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிப்பதில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது

குடா நாட்டிலுள்ள முக்கிய பாடசாலைகளில் இட நெருக்கடி காரணமாக பிள்ளைகளை முன்பு சேர்ப்பது போல் இம்முறை சேர்க்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகையால் எந்த வகுப்புக்களில் புதிதாக சேர்ப்பது என்றாலும் எமது அலுவலகத்தின் ஊடாகவே சேர்க்கப் பட்டுவருகின்றது

இப்படி அவர் கூறினர். (இ-88)

## இளைப்பாறுகிறர்

கொடிகாமம், ஜன.6

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாக அதிகாரி திரு. ஏ. சண்முகராசா தனது சேவைக் காலம் நிறைவுற்று 01-02-87 முதல் இளைப்பாறுகின்ருர் (இ-75)

## புதிய கட்டடத்தில் ஆயுள்வேத வைத்தியசாலை

கொடிகாமம் ஜன 6

வரணி ஆயுள்வேத வைத்தியசாலை புதிதாகக் கட்டப்பட்ட கட்டடம் ஒன்றில் செயற்பட ஆரம்பித்துவளது.

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் வரணி உப அலுவலக அதிகாரமளிக்கப் பட்ட உத்தியோகத்தர் திரு. எஸ். அருன்நந்தி இதனை திறந்துவைத்தார். (இ-75)

## தமிழ் இலக்கிய நூல்களுக்குப் பரிசு

யாழ்ப்பாணம், ஜன 6

உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவரும் மலேசிய தமிழ் எழுத்தாளருமான திரு. இரா வீரப்பன் உலகில் வாழும் தமிழ் எழுத்தாளர்களது தரமான நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

இப்பரிசுத் திட்டம் 1990 வரை அமுலில் இருக்கும் ஆண்டு தோறும் பரிசு வழங்கப் படும்.

பின்வருவோர் நூல் தெரிவு குழுவில் இடம் பெறுகின்றனர்

1 சங்கொலி ஆசிரியர் சோலை இருசன் (சேலம் இந்தியா) 2. அறங்காவலன் ஆசிரியர் என் எம். நாகரத்தினம் (பர்மா) 3. தினச்சுடர் துணை ஆசிரியர் கவிஞர் உலகநாதன் (பெங்களூர் இந்தியா) 4. அந்தமான் முரசுஆசிரியர் சுப சுப்பிரமணியம் (போர்ட்பிளையர் அந்தமான்) 5. கவிஞர் ப. கு. சண்முகம் (மலேசியா) 6 லண்டன் முரசு சிறப்பாசிரியர் அரங்க முருகையன் (லண்டன்) 7 பாவலர் முல்லை வாணன் (சிங்கப்பூர்) 8. பேராசிரியை திருமதி ச. மதனகல்யாணி (பாண்டிச்சேரி). 9 சட்டத்தரணி, எழுத்தாளர் பொன் பூலோகசிங்கம் (ஈழம்)

ஈழத்து எழுத்தாளர்கள் 1986 ஆம் ஆண்டு தம்மால் வெளியிடப்பட்ட நூலின் ஒரு பிரதியை யாழ்ப்பாணம் ஸ்ரேசன் வீதியிலுள்ள 67 ஆம் இலக்க இல்லத்திலுள்ள உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைமைச் செயலகத்தில் ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளனர். (இ)

## விசேஷ பூசை

கரவெட்டி, ஜன. 6

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் வடமாநில தளபதி திரு. கிட்டுவின் இருபத்தேழாவது பிறந்த தினத்தை முன்னிட்டு கரவெட்டி உச்சில் பகுதியில் அமைந்துள்ள காளி கோவிலில் விசேஷ பூசையும், சொற்பொழிவும் இடம் பெற்றன (இ-70)


**ஓராண்டு கண்ணீர் அஞ்சலி**

திருமதி சத்தியவதனு விமலநாதன் (RAJANEE)



மலர்வு: 10 - 05 - 1962

ஆண்டவன் அடியில்; 06 - 01 - 1986

உங்களது அன்புப் பிரிவால் உளம் உருகும்

அன்புக் கணவர், மகன், சகோதரர்கள், உற்ருர், உறவினர், நண்பர்கள்.

காளி கோவிலடி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

செ. விமலநாதன் டென்மார்க்.


## அப்பாவிகள் இரத்தம் சிந்துவதை பார்த்துக் கொண்டிருக்க முடியாது

### வேல்முருகு கூறுகிறர்

அம்பாறை, ஜன 6

உண்மைகளைத் துணிவுடன் எடுத்துக் கூறும் அமைப்பாக பிரசைகள் குழு இயங்க வேண்டும். அப்பாவிமக்கள் இரத்தம் சிந்துவதை நாம் இனியும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

கல்முனை, சம்மாந்துறை, நிந்தவூர் பிரசைகள் குழுத் தலைவராக பதவி ஏற்றபின்னர் நடந்த கூட்டத்தில் பேசுகையில் கூட்டணிப் பிரமுகர் திரு கா.ஆ. வேல்முருகு மேற்கண்டவாறு தெரிவித்தார்

இப்பகுதிகளில் வாழும் சுமார் 500 தமிழ் இளைஞர்கள் இன்று ஆயுதப் படை முகாம்களில் அடைபட்டுக் கிடக்கின்றனர். பெற்றோர்கள் கண்ணீரும் கம்பலையுமாக முகாம்கள் முன்னர் தவம் கிடக்கின்றனர். தாய்மாரின்கண்ணீரைத் துடைக்கவேண்டும் வலு விழந்த இனமாக நாம் அழிந்துபோக முடியாது

இப்படி திரு வேல்முருகு மேலும் தெரிவித்தார்

வண பிதா லோப்பும் பேசினர். (இ-எ-14)

## மங்கையர் முகம்

## ஆனைக்கோட்டை கிராம நீதிமன்று

ஆனைக்கோட்டை, ஜன 6

ஆனைக்கோட்டை கிராம நீதிமன்று கீழ்க் காணப்படுபவர்களால் நடைமுறைப் படுத்தப் பட்டு வருகின்றது.

திரு. எம். பேரின்பநாயகம் (செயலாளர்,) திரு தே ப. அகஸ்தியர் திரு. இ. நமசிவாயம் திரு. மா தியாகராசா, திரு த. வேலாயுதபிள்ளை திரு. வே. குமாரசாமி, திரு. இ. துரைராசா திரு. மு. சண்முகம்.(இ)

## சாவகச்சேரியில் மின்சாரத்துக்கு அதிக நிதி

சாவகச்சேரி ஜன.6

சாவகச்சேரி நகரசபை இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் மக்களின் மின்சார தேவையை நிறைவேற்றுமுகமாக மின்மாற்றிகள் அமைப்பதற்கு ஐம்பது லட்சம் ரூபாவையும் மின் விஸ்தரிப்பிற்கு நாலு லட்சம் ரூபாவையும் செலவிட இருக்கிறது

நகரசபையின் உத்தேச வருமானம் 82 லட்சத்து 63 ஆயிரத்து 266 ரூபா எனவும் செலவு 82 லட்சத்து 34 ஆயிரத்து 120 ரூபாவெனவும் கணக்கிட்டுள்ளது.

இத்திட்டத்தில் மேலும் வீதிவேலைகளுக்கு மூன்று லட்சமும் உப நூல்நிலயங்கள் இரண்டு அமைக்க மூன்று லட்சமும் வடிகால் அமைப்புக்கு ஒரு லட்சமும் சந்தை நீர் விநியோகத்திற்கு ஒன்றரை லட்சமும் புதிய சந்தைக் கட்டடத்திற்கு அடையாள நிதியாக ஆறு லட்சமும் விளையாட்டு மைதானத்திற்கு ஒரு லட்சமும் சந்தைக்கான மலசல கூடம் அமைக்க 50 ஆயிரம்ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (இ-31)

# கல்வித் தேட்டத்தின் திறன்வெளிப்பாடே நூல்

### 'தமிழ்த் தென்றல்' வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜன 6

தேடிய கல்வி அறிவுத் தேட்டத்தின் திறன் வெளிப்பாடே நூல் வெளியீடுகள்.

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணிய சர்மா இவ்வாறு கூறினர்.

யாழ் பட்டப்படிப்புக்கள் கல்லூரியின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவின்போது 'தமிழ்த் தென்றல்' சஞ்சிகை வெளியீட்டு வைபவமும் இடம்பெற்றது.

வெளியீட்டுரை நிகழ்த்துகையில் அவர் மேலும் பேசுகையில், மாணவரின் விரிவுரைகள் மறக்கப்படலாம், குறிப்புகள் பழையதாகி விடலாம் ஆனல் நூல்கள் மட்டுமே வரலாற்றில் நிற்கும்.

மாணவர்கள் அறிவைத் தேடிக்கொள்வதுடன், அதைத்திரட்டி ஒழுங்குபடுத்தி அக்கல்வியை மற்றையோருக்கும் பரப்ப வேண்டும்.

தேடிய கல்வி மற்றையோருக்கும் கொடுக்கப் படும்போதே அது நிறைவு பெறும். இவ்வாறு சர்மா கூறினர்.

திரு. க. வாமதேவன் தலைமையில் நடைபெற்ற இவ்வெளியீட்டு விழாவில் திரு ந. பேரின்பநாயகம் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

திரு. எஸ். சிவலிங்கராஜா, திரு. ம. வேதநாதன் ஆகியோர் ஆசியுரைகளும், திரு. கே. அருள்வேல், திரு.கே யுகபாலசிங்கம், திரு.க. அரியநாயகம் ஆகியோர் ஆய்வுரைகளும் வழங்கினர்.

வெளிவாரி மாணவர் ஒன்றிய பத்திராதிபர் திரு. தி. மதிவதனன் பதிலுரை வழங்கினர். (இ-5)

## சொற்சிலம்பப்போட்டி

கரவெட்டி, ஜன.6

கலட்டி பாலர் பாடசாலை சொற்சிலம்பப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இப்போட்டிக்கு ஐக்கிய சன சமூக நிலைய செயலாளர் [illegible] தலைமைவகித்தார். (இ-70)

போராளிகள் நடவடிக்கைகளில்

## முஸ்லிம் இளைஞர் தலையிடக்கூடாது

### அஷ்ரப் கூறுகிறர்

அம்பாறை. ஜன. 6

முஸ்லிம் மக்களைப் பாதிக்காத முறையில் அமையும் தமிழ்ப் போராளிகளின் இலட்சிய நடவடிக்கைகளில் முஸ்லிம் இளைஞர் தலையிடக்கூடாது போராளிகளின் நடவடிக்கைகளும் முஸ்லிம் மக்களின் உயிர், பொருள், தன்மானம் ஆகியவற்றில் தலையிடுவதாக இருக்கக்கூடாது

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜனப். எம். எச். எம் அஷ்ரப், மேற்கண்டவாறு தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறர்.

அறிக்கையில் ஜனப் அஷ்ரப் மேலும் கூறியிருப்பதாவது;

இரண்டு முற்போக்குச் சக்திகளான தமிழ்ப் போராளிகளும் முஸ்லிம் இளைஞர்களும் மோதிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

முஸ்லிம் இளைஞர்களின் தனித்துவ உணர்வையும் அரசியல் விழிப்புணர்ச்சியையும் போராளிகள் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

முஸ்லிம் சமூகத்தை தனித் தேசிய இனம் என்று போராளிகள் ஏற்றுக் கொண்டால் தான் நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண முடியும்.

முஸ்லிம் மக்கள் தமிழர், இங்கவரால் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற முறையில் பயன்படுத்தப்படும் ஆயுதங்களும் அல்லர்; கூலிப்படைகளும் அல்லர்.

இப்படி ஜனப் அஷ்ரப் [illegible] தெரிவித்திருக்கிறர். (இ-[illegible])


**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



T. S. யோசப்

(இளைப்பாறிய O.A. கச்சேரி, மன்னர்.)

தோற்றம்: 16 - 05 - 1922

மறைவு: 07 - 12 - 1986

இவரின் மரணச் சடங்கில் பங்குபற்றிய அனைவருக்கும், மலர் வளையங்கள் அளித்தவர்கள் மற்றும் பல விதத்திலும் உதவியவர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேம்.

'எமில் நகர்', மன்னர்.

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகள், பேரப்பிள்ளைகள்.

வெளிநாடு செல்லும் பிரயாணிகளின் முக்கிய கவனத்திற்கு

உங்கள் பிரயாணம் எங்களால் நிச்சயிக்கப் படுகின்றதா என்பதை நீங்களே உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்!

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ, மானிப்பாய்.

✳ கனடா ✳ பிரான்ஸ்

✳ ஜெர்மனி ✳ நோர்வே

ஆகிய நாடுகளுக்கான உங்கள் பிரயாணம் எமது காரியாலயத்தில் மட்டுமே பதிவு செய்யப்படுகின்றது.

தனிப்பட்ட நபரோ அன்றி வேறு நிறுவன முகவர்களோ எம்மால் நியமிக்கப்படவில்லை.

நீங்கள் எம்முடன் நேரிலேயே தொடர்புகொள்ளுங்கள்.

உங்கள் வெளிநாட்டுப் பயணத்தை நிறைவேற்றக் காத்திருக்கிறேம்.

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ, மானிப்பாய்.

நோர்வே செல்பவர்களுக்கு இலவச பொண்ட் செய்து தரப்படும்.

எமக்கு வேறு கிளைகள் இடையாது !


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

வெற்றி தோல்விகளைச் சமமாகக் கொண்டு பற்றுதலை விட்டு யோகியாக கருமம் புரிவாயாக. சமமாகக் காணும் பான்மையே யோகம் எனப்படுவது.

— பகவத் கீதை

உதயன்
இல,15 உ ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 06-01-1987 த. பெ இல 28

## சமதர்மத்தை வளர்க்க ..

இடதுசாரிச் சக்திகளை அணி திரட்டுவது, முதலாளித்துவ அரசைத் தூக்கி எறிவதற்கான பொது வேலைத்திட்டத்தின்கீழ் ஒன்றுபட வைப்பது என்பன குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது

நவசமசமாஜக் கட்சியின் ஒன்பதாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு வெளியிடப்பட்ட அறிக்கையில் இவை வலியுறுத்தப்பட்டிருக்கின்றன

முதலாளித்துவ ஆட்சி முறையை விட, சமதர்ம— சோசலிஷ ஆட்சி முறை பெரிதும் விரும்பத்தக்கது. வர்க்க பதம் இல்லாத ஆட்சியின் கீழ்தான் சகல தரப்பு மக்களும் வாழ்க்கை வசதிகளை சமமாக அனுபவிக்க வாய்ப்பு உண்டாகும். ஒரே மனித சமூகத்தில், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்றும், ஏழை பணக்காரன் என்றும் வசதி படைத்தவன், வசதி அற்றவன் என்றும் பேதங்கள் இல்லாமல் வாழ்வதற்கும் சமதர்ம ஆட்சியே வழிகோலும் என்பதிலும் ஐயமில்லை.

ஆனால், இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் சமதர்ம அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சி கைகூடவில்லை. சுதந்திரக்கட்சி— இடதுசாரிக் கட்சிகள் கூட்டரசாங்கம் 1970 இல் பதவிக்கு வந்த போதிலும் முழுமையான சமதர்ம ஆட்சி நடக்கவில்லை ஒரு சில முற்போக்குச் சட்டங்கள், திட்டங்கள் அமுலுக்கு வந்தபோதிலும், பூரணத்துவமான சமதர்ம ஆட்சி நடத்தப்பட்டதாக இல்லை

அதற்குக் காரணம் இருக்காமல் இல்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முழுக்க முழுக்க இடதுசாரிப் போக்கு உடைய கட்சி அல்ல அதன் அடித்தளம் முதலாளித்துவம். அரசாங்கத்தை அமைப்பதற்காக முற்போக்குப் போர்வை போர்த்திக் கொண்டது. அது மட்டுமன்றி முழுக்க முழுக்க இனவாதத்தில் ஊறி வளர்ந்த கட்சி அது.

இடதுசாரிக் கட்சி ஒன்று அல்லது பல சேர்ந்து அரசு அமைக்க முடியாமற் போனது ஏன் என்ற கேள்வி எப்போதும் எழுந்து வந்தது சுதந்திரத்துக்கு முன்னரே இடதுசாரி இயக்கம் தெற்கிலும் வடக்கிலும் முளைவிட்டிருந்தது. எனினும் தேர்தல் ஒன்றில் வெற்றி பெற்று பூரணமான இடதுசாரிப் போக்குள்ள அரசு ஒன்றை அமைக்க முடியாமற் போனது ஏன் என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று

தெற்கிலும் சரி வடக்கிலும் சரி, பிரபுத்துவ— முதலாளித்துவ சமூக அமைப்பும் பொருளாதார அமைப்பும் நீண்ட காலத்தவையாக இருந்தன. இப்போதும் இருக்கின்றன. அவற்றை மாற்றவும், மக்கள் மனதை அந்தப் பக்கத்திலிருந்து திருப்பவும் நீண்ட காலம் தேவைப்படும் என்பது உண்மையே

எனினும் இடதுசாரி இயக்கம் — அதன் தலைவர்கள் ஒன்றுபட்டு இயங்காததாலேயே இப்போதும் மக்கள் அபிமானத்தை அமோகமாக — ஓர் அரசாங்கத்தை அமைக்கக்கூடிய அளவுக்கு — பெறமுடியாமல் இருக்கிறது என்பதை மறுக்க இயலாது.

இடதுசாரி இயக்கங்களில் உயர்பீடத்தில் உள்ளவர்களிடம் அடிக்கடி கருத்து வேறுபாடுகள் தோன்றும். அதன்விளைவாக அவர்கள் பிரிவார்கள். ஒவ்வொருவர் ஒவ்வொரு கட்சியை அல்லது அணியை ஆரம்பிப்பர். தலைமைத்துவ ஆசை, பதவி ஆசை என்பனவே இதற்கு முக்கிய காரணம்.

இந்தப் பிரிவு, பிளவு இல்லாமல் இடதுசாரிகள் ஒரே தலைமையின் இயங்கி, திட்டமிட்டுச் செயலாற்றி இருப்பின் பெரும் எண்ணிக்கையான மக்கள் அபிமானத்தைப் பெற்றிருக்கக்கூடும்.

இனிமேலாவது,

இடதுசாரி — சமதர்ம இயக்கம் வளர வேண்டுமானால் பல கட்சிகளும், அணிகளும் ஒன்றாக வேண்டும். ஆகக் குறைந்தது பொதுவேலைத் திட்டத்தின் கீழாவது சேர்ந்து இயங்கவேண்டும். அரசாங்கத்தைத் தூக்கி எறிவதற்காக மட்டுமன்றி, சமதர்மக் கொள்கைகளில் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் செயலாற்றுவதற்காகவும் ஒன்றாக இயங்க வேண்டும்.

சோசலிஷம் பேசிக்கொண்டு தலைவர்கள் முதலாளிகளாக மாற முயற்சித்தால் மக்கள் அவர்களை எவ்வாறு நம்புவார்கள்? அபிமானிகளாக மாறுவார்கள்?

தலைவர்கள் தொடக்கம் தொண்டர்கள் வரை, சோசலிஷ சமுதாயத்தை உருவாக்கத் தம்மைப் பூரணமாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

இதுவரை அது நடக்கவில்லை இனியாவது நடக்குமானால் சமதர்ம கோட்பாடுகளுக்கு மக்கள் ஆதரவு கிடைக்கலாம். படிப்பது தேவாரம் இடிப்பது சிவன்கோவில் என்ற நிலைமை இருக்கும்வரை சமதர்மம் வளர்வது மிகவும் கடினம்.

## மின்பாவனையாளர் அவதி

மண்டைதீவு, ஜன 6

மண்டைதீவுப் பகுதியில் தொடர்ந்து பல மாதங்கள் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதால் மின்பாவனையாளர்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகி வருகின்றார்கள்.

யாழ் கோட்டை இராணுவமுகாம் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு மண்டைதீவுச் சந்தியில் துண்டிக்கப்பட்ட மின் இணைப்பை மீண்டும் பொருத்துவதற்குரிய ஒழுங்குகளை உடன் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து உதவுமாறு மண்டைதீவு பிரஜைகள் குழு செயலாளர் யாழ் அரச அதிபரிடம் கோரியுள்ளார். (இ-88)

மாணவர் கிளர்ச்சியால்

# சீன தலைமைப்பீடத்தில் கருத்து வேறுபாடு

பீகிங், ஜனவரி 5

கிளர்ச்சி செய்யும் மாணவர் மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து சீன அரசுத் தலைமைப் பீடத்தில் கருத்து வேறுபாடு நிலவுகின்றது:

சீனத் தலைநகரில் இது பற்றிய தகவல்கள் வெளிவந்திருப்பதாக பி. பி. சி. வானொலியின் பீகிங் செய்தியாளர் மார்க் பிரெய்ன் அறிவித்திருக்கிறார்.

கடந்த ஒருமாதகாலத்துக்கு மேலாக கூடுதல் ஜனநாயக உரிமைகளைக் கோரி சீன பல்கலைக்கழக மாணவர் கிளர்ச்சி நடத்தி வருகின்றனர்.

இதுவரை பன்னிரண்டு பெரிய நகரங்களில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடந்து உள்ளன.

கிளர்ச்சி செய்யும் மாணவர்மீது கடும் நடவடிக்கை எடுக்க சீன அரசு தயக்கம் காட்டுகின்றது; கடும்வார்த்தைகளைப் பிரயோகித்து அறிக்கைகளையும் வெளியிடவில்லை

இதுவே சீன அரசுத் தலைமைப்பீடத்தில் நிலவும் கருத்து வேறுபாடுகளைக் காட்டுகின்றது என்று பி. பி. சி. செய்தியாளர் தெரிவித்தார். (இ.எ)

**வெளி உலகில்**

ஜன நாயக உரிமை கோரி

## பீகிங் பல்கலைக் கழக சுவர்களில் சுவரொட்டிகள்

பீகிங், ஜன. 5

கூடுதல் ஜனநாயக நடவடிக்கைகளுக்கு இடமளிக்கும்படி சீனத் தலைவரைக் கோரும் சுவரொட்டிகள் நேற்று பீகிங் பல்கலைக் கழகச் சுவர்களில் ஒட்டப்பட்டிருந்தன

மாணவர் கிளர்ச்சியைப் பற்றித் தவறான கருத்துகளை வெளியிட்டதற்காக சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நாளிதழைக் கண்டித்தும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன

மாணவரின் கோரிக்கைகள் பத்துத் தினங்களுக்குள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் சுவரொட்டிகளில் எழுதப்பட்டு இருந்தது.

இதனிடையில் மாணவர் கிளர்ச்சிக்கு ஊக்கமளித்ததுக்காக இரண்டு பேரைப் பொலீஸார் காவலில் வைத்தனர்.

## மே அல்லது ஜூனில் பிரிட்டனில் தேர்தல்

லண்டன், ஜன 5

பிரிட்டனில் இந்த ஆண்டு மே அல்லது ஜூன் மாதத்தில் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்த கன்சர்வேட்டிவ் கட்சி தயாராக உள்ளதாக அறிவிக்கப்படுகிறது

திடீர் பொதுத் தேர்தலை எதிர்நோக்கித் தொழிற்கட்சியும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் நீல்கின்னொக் அறிவித்திருக்கிறார். (இ-எ)

## அமெரிக்கா வலியுறுத்தும்

வாஷிங்டன், ஜன 5

தென் ஆபிரிக்காவின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸுடன் அதிகாரப் பகிர்வு செய்து கொள்ளும் திட்டமொன்றை அமெரிக்க அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

இப்படி வெள்ளை மாளிகை அறிவித்தது.

## 1,760 குடிமக்கள் கொலை!

பொகொடா, ஜனவரி 5

1986 ஆம் ஆண்டு கொலம்பியா நாட்டில் 1760 குடிமக்கள் கொல்லப்பட்டனர். இடதுசாரி கெரில்லாக்கள், போதைக் கடத்தல் குழுக்கள், அரசியல் விரோதிகள், ஆகியோரால் இவர்கள் கொல்லப்பட்டனர் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

## ஆஸி. பொருளாதாரம் இந்த ஆண்டு திருப்தி இல்லை

சிட்னி, ஜன. 5

ஆஸ்திரேலிய பொருளாதாரம் இந்த ஆண்டில் அவ்வளவு பிரகாசமானதாக இருக்காது என்று பொருளாதார ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளது.

வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பும் இதற்கு ஒரு காரணம் என்று 'த ஏஜ்' என்னும் பத்திரிகை தெரிவித்துள்ளது. (இ-எ)

## கறுப்பு அமைச்சர்கள் அதிருப்தி

கேப்டவுன், ஜன 4

தென் ஆபிரிக்க ஜனாதிபதியுடன் இரண்டு கறுப்பு இன அமைச்சர்கள் கருத்து வேற்றுமை கொண்டுள்ளனர்.

பகிரங்கமாகவே தங்கள் எதிர்ப்பை இரண்டு அமைச்சர்களும் வெளியிட்டு இருக்கின்றனர்.

கறுப்பு இன அரசியல் கட்சி ஒன்றின் தலைவரான டாக்டர் ஹென்டிரிக்ஸன் தென்ஆபிரிக்க அரசு அண்மையில் அறிவித்த பத்திரிகைத் தணிக்கை சட்டத்தைக் கண்டித்திருக்கிறார்.

அரசுக்கு கொடுத்து வரும் ஆதரவை விலக்கிக் கொள்ள தனது கட்சி தயாராக இருப்பதாகவும் அவர் அறிவித்துள்ளார். (இ-எ)

## பிரான்ஸ் ஆராய்கிறது

பாரிஸ், ஜன. 5

சாட் நாட்டின் தென் பகுதி மீது லிபியா நடத்தும் விமானத்தாக்குதல் குறித்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பிரெஞ் பற்றி அரசு ஆராய்கிறது.

## ஊர்வலம் நடத்தமுயன்ற 10 பேர் கைது!

லண்டன், ஜன. 5

பிரச்சினைகளுக்குரிய ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்துவதைக் கட்டுப்படுத்தும் பொதுசனப் பாதுகாப்புக் கட்டளையை எதிர்த்து ஊர்வலம் ஒன்றை நடத்திய பத்துப்பேரை லண்டன் பொலீசார் நேற்றுக் கைதுசெய்து காவலில் வைத்தனர்.

பிரச்சினைக்குரிய விஷயங்கள் குறித்து ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்துவோர் 6 தினங்களுக்கு முன்னர் அறிவித்தல் கொடுக்கவேண்டும் என்று புதிய கட்டளை நிபந்தனை விதித்துள்ளது (இ-எ)

## மேற்கு ஜெர்மனியில் 1986 புத்தாண்டு செய்தி ஏற்படுத்திய பரபரப்பு

பொன், ஜன.5

1987 ஆம் ஆண்டுக்கான புத்தாண்டுச் செய்தியை ஒளிபரப்புவதற்குப் பதில் 1986 இல் ஒலிபரப்பிய புத்தாண்டுச் செய்தியை ஒலிபரப்பிய மேற்கு ஜெர்மன் ஒளிபரப்பு நிலைய ஜனாதிபதியிடம் மன்னிப்புக் கோரியது.

தவறுதலாக இது நடந்து விட்டது என்று நிலைய டைரக்டர் தெரிவித்தார்.

'மேற்கு ஜெர்மன் ஜனாதிபதி 1986 ஆம் ஆண்டுக்கான புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறார்— என்று அந்த ஒளிபரப்பு நிலையம் தவறுதலாக அறிவித்தது

மன்னிப்பை மேற்கு ஜெர்மன் ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார். (இ-எ)

## றேகனுக்கு சத்திர சிகிச்சை

வாஷிங்டன், ஜன.5

அமெரிக்க அதிபர் றேகனுக்கு மேரிலாந்தில் உள்ள இராணுவ ஆஸ்பத்திரியில் வீக்கமடைந்த சுரப்பிநோய் சம்பந்தமாக சிறு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப் பட்டது.

அதிபர் றேகன் புற்றுநோயினுல் பிடிக்கப்படவில்லை என்று பின்னர் வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-எ)

**செய்திக்கொத்து**

### வவுனிக்குளம் மக்கள் பாதிப்பு

அச்சுவேலி, ஜன, 6

வவுனிக்குளம் பகுதி விவசாயிகள் நெல் விதைக்க முடியாமல் வானம்பார்த்த நிலையில் இருக்கின்றனர் குளத்தில் நீர்மட்டம் மிகக் குறைந்த நிலையில் உள்ளது.

வவுனிக்குளத்திற்கு நீர்வழங்கும் பிராந்தியங்களில் மழை பெய்யாததே இதற்குக் காரணம். (இ- 11)

### கிராம எழுச்சிக் கொண்டாட்டம்

புங்குடுதீவு, ஜன. 6

கிராம எழுச்சி இயக்கத்தின் (கம்உதாவ) ஒன்பதாவது ஆண்டுக் கொண்டாட்டங்கள் ஜூன் 23ஆம் திகதி தொடக்கம் ஜூலை 3ஆம் திகதி வரை கதிர்காமத்தில் நடைபெறவுள்ளன.

இதனையொட்டி கல்வியமைச்சு பாடசாலை மாணவர்களுக்கிடையே அகில இலங்கை ரீதியில் கட்டுரை, சித்திரப் போட்டிகளை நடத்த இருக்கிறது. (இ-113)

### சீட்டிழுப்பு

கைதடி, ஜன. 6

நாவற்குழி மகாவித்தியாலயத்தின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு பாடசாலை அதிபர் திரு. த. முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெற்றது.

அதிபர் தமது தலைமை உரையில் இரண்டாயிரம் சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டு ரூபா 20 000 சேகரிக்கப்பட்டுள்ளன எனக் கூறினர். (இ-74)

### எலி வாகனம்

மானிப்பாய், ஜன. 6

உடுவிலில் உள்ள கற்பொக்கணைப் பிள்ளையார் ஆலயத்துக்கென புதிதாக எலி வாகனம் ஒன்றை இளைஞர்களும் பொதுமக்களுமாகச் சேர்ந்து உருவாக்கியுள்ளனர்.

திருவெம்பாவை கடைசி நாளன்று எலி வாகனம். ஊர்வலமாக கொண்டு வரப்பட்டு, அன்றைய திருவிழாவில் பிள்ளையாரை புதிய எலி வாகனத்தில் அமர்த்தி பொதுமக்கள் திருவுலாக் கொண்டு சென்றனர். (இ-90)

### கோண்டாவில் வீதி மின்சார விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், ஜன 6

கோண்டாவில் ஞானவீரசங்க சனசமூக நிலையத்தினரின் முயற்சியால் கட்டையாலடி மயான மதில் சுவர் கட்டட வேலைகளும், புகையிரத களஞ்சிய வீதி மின்சார விஸ்தரிப்பு வேலைகளும் நடைபெறுகின்றன.

சனசமூக நிலையத்தினரின் வேண்டுகோளின்படி யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை நிதி ஒதுக்கீட்டிலிருந்து 60 ஆயிரம் ரூபாவை அரச அதிபர் இவ் வேலைகளுக்கென ஒதுக்கியுள்ளார். (அ-5)

### இடமாற்றம் ரத்துச் செய்க

கொடிகாமம், ஜன 6

தென்மராட்சி சனசமூக நிலைய சமாஜம், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. க. துரைராசாவின் இளிநொச்சி இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு கோரி மேல் அதிகாரிகளுக்கு மகஜரை அனுப்பி வைத்துள்ளது.

தென்மராட்சியின் அபிவிருத்திக்கென அவரால் ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் ஸ்தம்பிக்க இடமாற்றம் ஏதுவாகும் என்று மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-75)

### வடமராட்சியில் சிரங்கு

வல்வெட்டித்துறை, ஜன. 6

வடமராட்சியில் சிரங்கு பரவிவருகின்றது.

நீர்நிலைகளுக்கு குளோரின் போன்ற மருந்து வகைகள் பயன்படுத்தப் [illegible] என [illegible] தெரிவிக்கின்றனர். (இ-160)

### திருவள்ளுவர் சனசமூக நிலையம்

சாவகச்சேரி, ஜன. 6

சாவகச்சேரி கச்சாய் வீதியில் திருவள்ளுவர் சனசமூகநிலையத்தை அறவழிப் போராட்டக் குழுவின் தலைவரும் சர்வதேச சமாதான சேவை இயக்க வடபிரதேசத் தலைவருமான திரு. வி. எஸ். துரைராசா மங்களதீபம் ஏற்றித் திறந்து வைத்தார்.

நிலையத் தலைவர் திரு வி. நாகராசா தலைமையில் இவ்விழா நடைபெற்றது. (இ-31)

### பனம்பொருள் கைப்பணிப் பயிற்சி

வல்வெட்டித்துறை, ஜன. 6

கல்பொலை இராச இராமத்தில் பனம்பொருள் கைப்பணிப்பயிற்சி நிலையம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

பயிற்சியில் இக்கிராமத்துப் பிள்ளைகள் 25 பேர் ஈடுபட்டுவருகின்றனர். (இ-160)

### தென்னை மானியம்

வேலணை. ஜன. 6

வேலணை கமநலசேவை நிலையத்தில் தென்னை மானியம் சம்பந்தமான கூட்டம் ஒன்று நடைபெற்றது.

வடபகுதிக்கு பொறுப்பான தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், வேலணை பெரும்பாக உத்தியோகத்தர் திரு. நா. குழந்தைவேல், வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. தா சந்திரசேகரம், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தீவுப்பகுதியில் புதிதாக தென்னங்கன்றுகளை நடுபவர்களுக்கு மானியம் வழங்க [illegible] (இ - 167)

**பொய்யாமொழி**



குறள்:

இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

பொருள்

மயக்கம் நீங்கிக் குற்றம் அற்ற மெய்யுணர்வு உடையவர்க்கு, அம்மெய்யுணர்வு அறியாமையை நீக்கி இன்ப நிலையைக் கொடுக்கும்.

## களத்தில் போராடும் போது கூட தலைவரின் கருத்து அறிந்தே செயற்படுகிறோம்

வடமராட்சிப் பொறுப்பாளர் கூறுகிறார்

பருத்தித்துறை, ஜன. 6

நாம் களத்தில் போராடும்போதுகூட எமது தலைவர் பிரபாகரனின் கருத்து அறிந்தே செயற்படுகிறோம். அந்த அளவு எமக்கும் அவருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு.

வடமராட்சிப் பகுதி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பொறுப்பாளர் திரு. சூசை இவ்வாறு கூறினர்.

பருத்தித்துறையில் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் புதிய நூலகத்தை புலோலி மேற்கு பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. கு. கணபதிப்பிள்ளை திறந்து வைத்தார்.

இவ்விழா புலோலி ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் நடைபெற்றது.

அச்சமயம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட திரு. சூசை கூறியதாவது.

நாம் களத்தில்போராடும்போதுகூட முக்கிய முடிவுகளை இந்தியாவிலுள்ள எமது தலைவர் திரு. வே பிரபாகரனின் கருத்தை அறிந்தே செயற்படுகிறோம்.

அவர் இந்தியாவில் இருந்தாற்கூட இராணுவ முகாம்கள் அருகிலுள்ள எமது பாதுகாப்பு அரண்கள் பற்றிய விளக்கப்படங்கள் அவரிடம் உண்டு.

இங்கு நடைபெறும் சகல அரசியல் வேலைத் திட்டங்களும் அவருக்குத் தெரிவிக்கப்பட்டு அவரின் அனுசரணையுடனேயே செயற்படுத்தப்படுகின்றன.

நாம் தலைமைப்பீடத்தில் வைத்திருக்கும் விசுவாசம் உன்னதமானது. அதுபோல் எமக்குக் கீழ் உள்ள எமது போராளிகள் உண்மையான விசுவாசமும் கட்டுப்பாடும் உடையவர்களாக உள்ளார்கள்.

அதனாலேயே எமது இயக்கத்தை எந்தச் சக்தியாலும் உடைக்கவோ பிரிக்கவோ முடியாதுள்ளது.

இப்படி அவர் கூறினர். (இ-118)

**சமய சந்நிதிகளில்**

### துன்னாலைவடக்கில் இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், ஜன. 6

துன்னாலை வடக்கு ஸ்ரீ வல்லிபுரஆழ்வார்சுவாமி ஆலய ஏகதின இலட்சார்ச்சனை ஒன்பதாவது ஆண்டு சுவர்ண புஷ்ப அர்ச்சனை மகாவிஷ்ணு உற்சவம் ஆகியன ஜனவரி 10ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

10 ஆம் திகதி சுவர்க்க வாயில் ஏகாதசி விரதம் ஆகும். (ஒ-10)

### திருவாசக விழா

சாவகச்சேரி, ஜன 6

நுணாவில் மேற்கு மருதடி விநாயகர் ஆலயத்தில் இம்மாதம் 25ஆம் திகதி திருவாசக விழா சிறப்புற நடைபெறவிருக்கிறது.

தென்மராட்சி சைவ மகாசபையினரின் திருவாசக முற்றோதலும் சைவப் பெரியார்களின் சொற்பொழிவுகளுடன் கூட்டு வழிபாடும் நடைபெற ஏற்பாடாகி இருக்கிறது.

காலை முதல் மாலை வரை நிகழ்ச்சிகள் இடம் பெறும்- (இ-81)

## மேலும் 5 பாடசாலைகள் அறவழி போராட்டக்குழுவிடம்

சாவகச்சேரி, ஜன. 6

அறவழிப் போராட்டக்குழுவினர் இம்மாதம் 3 ஆம் திகதி மேலும் ஐந்து பாலர் பாடசாலைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

தனங்கிளப்பில் ஆரம்பிக்கப்பட்ட பண்டிதமணி சி. க. நினைவுப் பாலர் பாடசாலை மற்றும், மீசாலை வடக்கு, மறவன் புலவு வடக்கு, வேலணைகொற்றுவத்தை ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளே இந்த ஐந்தும் ஆகும்.

இவைகளுடன் மொத்தம் 30பாலர் பாடசாலைகளை நிர்வகிக்கும் இக்குழுவினர் தைப்பொங்கல் தினத்தன்றும் மேலும் ஐந்து பாடசாலைகளைப் பொறுப்பேற்க இருப்பதாகத் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கு

ஸ்ருடியோ

★ நித்ய சித்ரா ★

ச ங் கா னை.


# உதயன்

06 01 1987 செவ்வாய்க்கிழமை


வீடியோ — கறுப்பு / வெள்ளை—

வர்ணப் படப்பிடிப்புக்கும்

பிறேம் செய்தலுக்கும்

கலர் படங்கள் கழுவுதற்கும்

ஸ்ருடியோ நித்ய சித்ரா,

ச ங் கா னை.


## விசித்திரம்

என்ன தம்பி முரளி, இந்தப் பக்கம் எங்கே வந்தனீர்?

எட நான் சொன்ன தோடை லைக்கிளையும் விட்டிட்டு நடராசாவிலேயே வந்திட்டாய்போல மெத்த நல்லது எல்லாரும் உப்பிடி மாறவேணும்.

நடக்கிறது உடம்புக்கு எவ்வளவோ நல்ல தேகப்பியாசம் தெரியுமா? சும்மா சத்தில்லாத சாப்பாடுகளையும் சாப்பிட்டு, புதுப்புது வியாதிகளையும் நாங்களாகத் தேடிக்கொண்டிருக்கிறோம்.

பத்துப் பன்னிரண்டு வயதுப் பிள்ளைகளுக்கும் சலரோகம் வருகுது. முந்தின காலத்திலை வெள்ளெழுத்து எண்டு ஐம்பதுக்கும் பிறகுதான் கண்ணாடி போடுவினம். இப்ப......?

மூந்தநாள் பிறந்த முளையாமுட்டியள் எல்லாத்தின்ரை கண்களிலேயும் கண்ணாடி! விஞ்ஞானம் முன்னேற புதிய புதிய ஆபத்துக்களும் எங்களை எச்சரிக்குதுகள்

விவசாயம் எண்டால் எரிபொருள், கிருமிநாசினி இல்லாட்டால் செய்யமாட்டோம். அதுகளின்ரை விளைவு. நஞ்சு கலந்த உணவுப்பொருள்களை நாம் சாப்பிடுகிறோம் அது அன்று அறுக்காவிட்டாலும் நின்று நின்று, மெது மெதுவாக, நாளாந்தம் வாழ்நாளை அரித்து வருகுது.

பயிரினங்களை பூச்சி, புழுக்கள் தாக்கக் காரணம் எங்கடை சுற்றுடல் சூழல் பாதிப்படைவதுதான் என்கிறார் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த ஹோம சிகிச்சையாளர் பேராசிரியர் எல். ஜீ. மூலே. அவரை இரண்டு அன்பர்கள் நேற்று உதயன் கந்தோருக்குக் கூட்டிக்கொண்டு வந்தார்கள்.

ஐந்து நிமிடங்கள் மட்டுமே அவருடன் கதைச்ச போது பல பெரிய தத்துவங்களை வெளியிட்டார்.

உதயன் உதிக்கும் போதும் அவன் மறையும் போதும் ஹோமகுண்டம் எரிச்சால் சுற்றுடல் சூழல் அசுத்த மடைவதைத் தடுக்கலாம் பயிர்ப் பச்சையளில் பூச்சி புழு பிடியாது வைரஸ்கள் உருவாகி நோய் நொடி அணுகாது எண்டு அவர் விளக்கினார்.

அந்த ஹோமத்தை — அக்கினி ஹோமோத்திர யாகம் எண்டு சொன்னார். அதை எரிப்பதற்கு செப்பிலை செய்த ஒரு சிறு ஹோம குண்ட பாத்திரத்தையும் காட்டினார்.

அதை எரிப்பதற்குத் தேவைப்படுவது எல்லாம் சாண விராட்டி, சிறிது திட்டாத அரிசி. சிறிது பசுவின் நெய் அவ்வளவும்தானாம்.

காலையும் மாலையும் எரித்தால் காற்று மண்டலம் சுத்தமாக மாறும் அதாலைபிரபஞ்ச சக்தி பிரபஞ்சக் கதிர் மனிதனது உடலில்படும் அதனால் அவன் மனசுத்தியும், உடல்தைரியமும் உள்ளவன் ஆவான். மன சுத்தி வந்தால் கோபம், பொறுமை உண்டாகாது உலகில் சமாதானம் நிலைக்கும் தர்மம் தழைக்கும் இப்படி எல்லாம் அவர் சொன்னார்.

விஞ்ஞானக் காலம் இது. இதுகளை சனம் நம்பாது. ஹோமகுண்டம் எரிப்பதைச் சொன்னதும் சமயம் எண்டு சொல்லும். பழக்காலப் பழக்கம் எண்டு ஒதுக்கும். — இப்படி நான் சொன்னதும் அவர் என்ன கூறினார் தெரியுமோ......?

வருங்காலத்திலை சமயம் விஞ்ஞான வடிவத்திலைதான் இருக்கும் எண்டு சுவாமி விவேகானந்தர் சொல்லி வைத்து விட்டாரே என்று கூறிச் சிரித்தார்

காண்டேடி

## எரிபொருள் தடை விவகாரம்

# செஞ்சிலுவைச்சங்கம் தலையிட வேண்டும்

## பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழு தந்தி

யாழ்ப்பாணம். ஜன 6

ஸ்ரீ லங்கா அரசு தமிழ் மக்கள் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையை நீக்கும் முயற்சியாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உடனடியாக தலையிட வேண்டும்.

யாழ் பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டிக்கு நேற்று அனுப்பிய 'ரெலக்ஸ்' செய்தியல் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1887ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி ஸ்ரீலங்கா அரசு யாழ் குடாநாட்டுக்கு மண்ணெண்ணை டீசல், பெற்றோல் கொண்டு வருவதை தடை செய்தது

இந்த நடவடிக்கை குடாநாட்டின் மீது ஒரு பொருளாதாரத் தடையை ஏற்படுத்தியுள்ளது.

இது உடனடியாக நீக்கப்படாவிட்டால் இப்பகுதி மக்கள் பட்டினியால் வாட வேண்டிய நிலை உருவாகுவதை தடுக்க முடியாது

பல மாதங்களுக்கு முன்னர் 'சமையல் காஸ்' கொண்டுவருவதும் மூற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரிகள், பாடசாலைகளையே, திபர்நிலையங்கள் அங்கவீனவர்கள் விடுதிகள், அகதிகள் நலன்புரி நிலையங்கள், என்பன இயங்கமுடியாத நிலையில் உள்ளன.

இப்படி செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## வேம்படி மகளிர் கல்லூரியிலும் அனுமதி

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் ஏழாம் ஆண்டு (ஆறும் வகுப்பு) அனுமதிப் பரீட்சை எழுதிய மாணவிகள் பலர் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் அனுமதிக்கப்படவுள்ளனர்.

பிரதம கல்வியதிகாரி திரு. கே. கந்தசாமி இதனைத் தெரிவித்தார்.

அனுமதிப் பரீட்சையில் 128 புள்ளிகளும் அதற்கு மேலும் பெற்றவர்கள் இந்து மகளிர் கல்லூரியில் சேர்க்கப்படுவார்கள்.

இவர்களுக்கென இந்து மகளிர் கல்லூரியில் மேலதிக ஒரு வகுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது.

127 புள்ளிகளும் அதற்கு கீழும் எடுத்தவர்களுள் 100 பேருக்கு யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் அனுமதி வழங்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-5)

## புலி இல்லையா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த பெண்களே இப்படி முறையிட்டனர்

இக் கிராமங்களின் மத்தியில் ஊறணி படைமுகாம் உள்ளது.

இம் முகாமைச் சேர்ந்த படையினர் சிலர் இக் கிராமங்களுக்கு தேடுதல் நடத்தச் சென்று ஆண்கள் விசாரணைக்கு என்று முகாமுக்கு அழைத்துச் சென்ற பின்னர், நள்ளிரவு வேளைகளில் வீடுகளுக்குள் புகுந்து இளம் பெண்களுடன் தகாத முறையில் நடக்கின்றார்களாம்.

இதனால் இக்கிராமங்களைச் சேர்ந்தவர்கள் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து செல்கிறார்கள் என்றும் பிரசைகள் குழுவுக்கு முறையிடப்பட்டது (இ-எ-21)

## முஸ்லிம்களை - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மோதல்கள் நடைபெற்றுவந்தன

5-ஆம் திகதிக்கு முன்னர் சரணடைய வேண்டும்; இல்லையேல் முகாமைத் தாக்குவோம் என்று ஈ பி ஆர் எல் எப். போராளிகளுக்கு புலிகள் காலக்கெடு விதித்துள்ளதாக ஆயுதப் படையினருக்குத் தகவல் கிடைத்தது.

இதைத் தொடர்ந்து பொலிஸ் கொமாண்டோக்கள் நிந்தாவூர் - காரைதீவு பிரதான வீதியில் சனிமாலை முதல் ரோந்து திரிந்தனர்.

அப்போது அந்தப் பகுதியால் வந்த பஸ் ஒன்றின்மீது பொலீஸ் கொமாண்டோக்கள் சுட்டனர்.

அப்போதுதான் அந்த பஸ் கொழும்பில் இருந்து அக்கரைப்பற்று சென்றுகொண்டு இருந்த தனியார் பயணிகள் பஸ் என்பது தெரியவந்தது.

சாரதி உட்பட 9 முஸ்லிம் பயணிகள் இதில் படுகாயமடைந்தனர்.

அனைவரும் அம்பாறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (இ-எ-14)

## பொருளாதார...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறோம்.

இந்த வகையில் இராணுவ ரீதியான அடக்குமுறை தோல்வியுற்ற நிலையில் எதிரி பொருளாதாரத்தை ஓர் ஆயுதமாக பாவித்து போராட்டத்தை நசுக்க முயல்வான்.

எம் எதிரி பொருளாதார தடைகளை ஏற்படுத்துவான் என்பது நாம் ஏற்கனவே நன்கறிந்த தொன்றே

இதற்கேற்ற வகையில் தீர்க்கதரிசன நோக்குடன் நாம் ஏற்கனவே எம்மக்களுக்கு இப்பொருளாதாரத் தடைகளைக் குறித்து எதிரியின் முயற்சிகளை சுட்டிக்காட்டி போராட்டத்தில் எம்மக்களுக்கு பெரும் பங்கினையும் குறித்திருந்தோம்.

இந்த வகையில் இன்று இனவெறி அரசால் விதிக்கப்பட்ட பொருளாதார தடைகள் போராட்டம் இராணுவ ரீதியில் பெற்றுவரும் வெற்றிகளை நசுக்க எதிரியால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இந்நிலையில் தமிழீழ மக்கள் ஒவ்வொருவரும் போராட்டத்தில் தமக்குள்ள உயரிய பங்கினை உணர்ந்து எதிரியின் இப்பொருளாதார தடையை முறியடிக்க ஒன்றுதிரண்டு போராடி இத்தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வென்றெடுப்போம்

இப்படி அறிக்கையில் கோரப்பட்டுள்ளது

## இருவர் கைது

சென்னை, ஜன. 5

புதுக்கோட்டை திருமயம் பகுதியில் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான ஜீப் ஒன்றுக்கு தீ வைக்க முயற்சித்த சம்பவம் தொடர்பாக 2 பேரை பொலீஸார் கைது செய்தனர். (இ-எ)

## வடக்கு ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்கின்றனர்.

இதுவும் தன்னிச்சை சுதந்திர பிரகடனத்தின் ஒரு பகுதியே

புலிகளின் இந்தச் செயல் குறித்து அரசு கடும் நடவடிக்கை எடுக்கும். கடும் நடவடிக்கை எப்படிப்பட்டது என்று நான் சொல்லமாட்டேன்

இப்படி அமைச்சர் அத்துலத்முதலி தெரிவித்தார் (இ-ஐ-எ)

## ஹோம...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ளர்.

அக்னி ஹோத்திரயாகம் மூலம் சுற்றுடல் சூழலை புனிதப்படுத்தும் முறை குறித்து யாழ் பல்கலைக்கழகம் பேராசிரியர்கள், மற்றும் சம்பந்தப்பட்டவர்களை அவர் சந்தித்துப் பேசுவர்.

அக்னி ஹோத்திரயாகத்தைப் பிரபல்யப்படுத்துவதே தமது விஜயத்தின் நோக்கம் என்று பேராசிரியர் மூலே சொன்னார்.

கொழும்பில் மூன்று வார காலம் தங்கியிருந்த அவர் அங்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சுற்றுடல் சூழல் சம்பந்தமான உரைகளை நிகழ்த்தினார். (அ)

## இலவச சிகிச்சை

பலாலி ஜன 6

தெல்லிப்பளை சித்தியம் புளியடியில் தற்போது வேகமாகப் பரவி வரும் சொறி சிரங்கு நோய்க்கு இன்று இலவச மருத்துவ சேவை அளிக்கப்படுகின்றது.

சித்தியம் புளியடி மாதிரிக் கிராம அமைப்பு இச்சேவையைச் செய்து வருகின்றது

சித்தியம்புளியடியில் மூன்று நிலையங்களில் வைத்து மருந்து விநியோகமும் சிகிச்சையும் அளிக்கப்படும் தெல்லிப்பளை மாவட்ட வைத்திய அதிகாரி, பொது சுகாதார சேவை அதிகாரி, மருத்துவமாது என்பவர்கள் இச்சேவைக்கு உதவி அளிக்கின்றார்கள் (இ-119)

## மர்க்கஸ் பெர்னாண்டோ தலைமையிலான குழு நேற்று வவுனியா, மன்னார் விஜயம்

யாழ்ப்பாணம், ஜன. 6

இலங்கை பிஷப் பேரவைத் தலைவர் அதிமேற்றிராணியார் மார்க்கஸ் பெர்னாண்டோ தலைமையிலான குழு நேற்று வவுனியாவுக்கும் மன்னாருக்கும் விஜயம் செய்தது.

வவுனியா ஆயர் இல்லத்தில் தங்கி நின்ற இவர்கள் வவுனியா மாவட்ட பிரசைகள் குழு, வவுனியா பிரசைகள் குழு, வர்த்தக சங்கம், ஆகியவற்றின் பிரதிநிதிகளை அழைத்து வவுனியா நிலைமை பற்றிக் கேட்டறிந்தனர்.

வவுனியா மாவட்ட பிரசைகள் குழுச் செயலாளர் டாக்டர் ஈ எஸ். பரராஜசிங்கம் வவுனியாவில் நடைபெற்று வந்த இராணுவ நடவடிக்கைகள் பற்றியும், தற்பொழுது வவுனியா மாவட்டத்தின் நிலைமை பற்றியும் அவர்களுக்கு எடுத்துச் சொன்னார்.

அதன் பின்னர் அவர்கள் மன்னார் பயணமானார்கள்.

இக் குழு நாளை 7ஆம் திகதி யாழ் வருமென யாழ் ஆயர் இல்ல வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களின் வடக்கு கிழக்கு விஜயத்தால் கத்தோலிக்க திருச்சபைக் கிடையிலிருந்த இனரீதியான மன வேற்றுமைகள் களையும் என ஆயர் வட்டாரங்கள் நம்புகின்றன. (இ-5-10)


## கருணாநிதிக்காக தீக்குளிக்க முயற்சி

சென்னை, ஜன. 6

தி. மு. க தலைவர் கருணாநிதி மற்றும் தொண்டர்களை விடுதலை செய்யும்படி கோரி தீக்குளிக்க முயன்ற தி. மு. க தொண்டர் ஒருவர் ஆபத்தான நிலையில் தஞ்சை ஊர் அரச மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்

அரியலூர், அண்ணா சாலையில் மண்ணெண்ணை ஊற்றி தீக்குளிக்க முயன்றபோது இவரை பொலீஸார் தலையிட்டுக் காப்பாற்றினர். (இ-எ)

## 31-ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

### சின்னத்தம்பி தம்பிராசா

தோற்றம்: 21 - 07 - 1923 | நிறைவு: 07 - 12 - 1986

அன்பின் திருவுருவே
ஆற்றல் நிறைந்தவரே
பண்பின் உறைவிடமே
பாசம் மிகுந்தவரே
எங்கள் அனைவருக்கும்
இவ்வுலகில் நல்வாழ்வு
தந்த உழைத்தவரே
தாங்காத துயருடனே
திங்களொன்று தீர்ந்தாலும்
தேம்பியழ வைத்திட்டு
எங்கு சென்றீர்
எம்மை விட்டு
ஈசன் திருவடிக்கே
நம்புகின்றோம், ஆனாலும்
நாங்கள் துயராறுது
வெம்பியழுகின்ற
வேதனைதான் தீராது.

எமது குடும்பத் தலைவர் இயற்கை எய்திய செய்தி அறிந்து நேரில் வந்து அன்னாரின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எமது துயரத்தில் பங்கு கொண்டு ஆறுதல் வழங்கிய அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன்,

இன்று 06-01-1987 செவ்வாய்க்கிழமை மு. ப 10 00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிரிகை நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்,

திருமதி தங்கரத்தினம்
தம்பிராசாவும் குடும்பத்தினரும்.

## சபாநாயகரை -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பொதுச் செயலாளரான அன்பழகன் இந்த ரிட் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

ரிட்மனு நேற்று சென்னை உயர்நீதி மன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

சட்டசபை சபாநாயகர், சட்டசபைச் செயலாளர், சட்டமா அதிபர் ஆகியோரை நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உயர்நீதிமன்றம் பணித்தது.

பத்துஎம்.எல்.ஏக்களும் இந்திய அரசமைப்புச் சட்டப்பிரதிகளை எரித்ததற்காக எம்.எல்.ஏபதவிகளில் இருந்து விலக்கும் சட்டம், சட்டசபையில் அண்மையில் நிறைவேற்றப்பட்டது தெரிந்ததே (இ-எ)

## வவுனியா..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை ஆசிரியர்களையும் அதிபர்களையும் வவுனியா மாவட்டக்கல்விப் பணிப்பாளர் திரு வெ. சபாநாயகம் பொறுப்பேற்று பதின் மூன்று பஸ்களில் அவர்களை ஏற்றி யாழ்நகருக்கு அனுப்பி வைத்தார் (இ-10)

## இராணுவ

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தடையை இந்திய அரசு பொருளாதாரத் தடையாகக் கருதுகிறது.

இத்தடை விதிக்கப்பட்டது குறித்து இந்திய அரசு ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கிறது

இந்த நடவடிக்கை இனப்பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வு காணும் சூழ்நிலையைக் கொடுத்து விடும்.

எரிபொருள் தடையால் மோசமான முறையில் பாதிக்கப்பட்டிருப்பதாக வடபகுதியில் இருந்து பிரசைகள் குழுக்கள் முறையிட்டுள்ளன.

அதைத்தொடர்ந்துதான் இந்தியா கவலையைத்தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது

இப்படி திரு டிக்சித் ஜனாதிபதியிடம் சொன்னார்.

ஜனாதிபதி, தூதர் கூறியவற்றைக் கேட்டுக் கொண்டார். பதில்

## கட்டுப்பாட்டுக்குள்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுப் பேச்சுக்கள் நடத்த இலங்கை அரசு தயாராக இல்லை. நிபந்தனையுடனான பேச்சுக்கள் பலமுறுத்தி நடத்தப்படும் பேச்சுக்களாகும்.

இலங்கையின் யோசனைகள், பேச்சுக்களைத் தொடர நல்ல அடிப்படை என்று கூட்டணி ஒப்புக் கொண்டுள்ளது.

இந்தியா உட்பட வெளிநாடுகளும் ஒப்புக் கொண்டு உள்ளன.

ஆனால் தீவிரவாதிகள் நிராகரித்துவிட்டனர்.

இது வேறு மாற்று நடவடிக்கைகளை எடுக்கும் நிர்ப்பந்தத்தையே இலங்கை அரசுக்கு ஏற்படுத்தியுள்ளது.

மீண்டும் யாழ் நகரை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஒரே ஒரு மாற்று நடவடிக்கை தான் உண்டு.

யாழ் நகரில் உள்ள 1 லட்சத்து 13 ஆயிரம் மக்களையும் வெளியேற்றுவதே அந்த மாற்று நடவடிக்கை

யாழ்ப்பாணப் பட்டினம் இப்போது தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

வடபகுதி மீது எரிபொருள் தடை விதித்துள்ளோம். [illegible] தடைகளையும் [illegible] எம்மால் முடியும்.

[illegible] தடைகளையும் தடுக்க முடியும், உணவுப் பொருள்களைத் தடுத்தால் அது மக்களைக் கஷ்டத்தில் ஆழ்த்தும்.

இப்படி திரு. அத்துலத் முதலி சொன்னார். (இ-எ)

## வ. பி. போ சபை எரிபொருளும் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜன 6

வ. பி. போ. சபைக்கு அனுப்பிவைக்கப்பட்ட எரிபொருளை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்க ஆனையிறவு ராணுவ முகாம் இன்றும் அனுமதிக்கவில்லை

இந்த எரிபொருளுக்கான விண்ணப்பத்தை தடை உத்தரவு வருவதற்கு முன்னதாகவே சமர்ப்பித்திருந்ததாகவும் அதனால் எவ்வித நிபந்தனையுமின்றி அதனை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவர அனுமதிவழங்கப்படவேண்டும் எனவும் வ. பி போ சபை அதிகாரி தெரிவித்தார்

குடாநாட்டினுள் இத்தடையால் மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவைகளும் தூரதேச சேவைகள் வழமைபோல நடப்பதாகவும் மேலும் அவர் தெரிவித்தார். (இ)


வடமராட்சியில்

பல்கலைக்கழக வெளிவாரி பட்டப் படிப்புகள்

கல்வியாண்டு 1987 / 88

★ G.A.Q. ★ கலைமாணி (B.A.)

க.பொ.த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விபரத்திரட்டையும் விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா 10 00 செலுத்தி நேரில் / தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 19-1-87

உதவி பதிவாளர்,

அவ்ரோ உயர்கலைக் கல்லூரி

நெல்லியடி, கரவெட்டி.



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி 06 - 01 - 1987

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane Power House Road, JAFFNA

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ 60.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org